# ஆதாரம்

புரட்டாதி - ஐப்பசி 1991 இதழ் 5
விலை 14/-

02-12-1991



- சமூக, பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழ்
- தமிழீழ ஆய்வு நிறுவன வெளியீடு

## பனையிலிருந்து சுவைமிகு உணவுவகைகள்!

- பனங்கட்டி
- புழுக்கொடியல்
- பனம்பாணி
- பனங்கழி

போன்றவற்றைப் பயன்படுத்தி நவீன உணவு வகைகளையும்,

பனம் பானம் ☐
பாம் கோலா ☐

ஆகிய மென் பானங்களையும்,

**பனை அபிவிருத்திச்சபை**

உற்பத்தி செய்து,

**கற்பகங்கள்**

மூலம் விற்பனை செய்கின்றது.

இவற்றை,
மொத்தமாக,
சில்லறையாக,
பெற்றுக்கொள்ள,

பனை அபிவிருத்திச் சபை,
சந்தைப்படுத்தும் பகுதி,
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

## ப்ளாவ்னி கிராமத்து மக்கள்

தொப்பிகளின் மேல் மண்டையோடும், எலும்புகளும் அடையாளம் பொறித்த, கறுப்புச் சீருடையணிந்த ஜெர்மனிய எஸ். எஸ் படையினர் ப்ளாவ்னி கிராமத்தை ஆக்கிரமித்தனர்.

ப்ளாவ்னி கிராமத்து மக்கள் தங்கள் வீடுகளையும், நிலத்தையும் வருஷக் கணக்காகச் சேகரித்த எல்லாப் பண்டங்களையும், அனேகமாக எல்லாக் கால்நடைகளையும் அப்படியே போட்டுவிட்டு தொலைவில் காட்டுக்குள் குடியேறிப் போய் விட்டார்கள்.

மண்ணைத் தோண்டி நிலவறைகள் அமைத்த பின் ஆண்கள் கொரிலாப் போர் புரியச் சென்றார்கள் பெண்களும், குழந்தைகளும் வசந்த காலம் வரை காட்டில் தங்கியிருந்தார்கள்.

கிராமத்தை எஸ். எஸ், படைகள் எரித்து சாம்பலாக்கி விட்டார்கள்.

கிராமத்தில் வாழ்ந்த மக்களுக்கு வீடுகளோ, வேளாண்மைக் கருவிகளோ; கால் நடைகளோ அன்றாடத் தேவைக்கான தட்டு முட்டுச் சாமான்களோ உடைகளோ எதுவுமே - பல தலை முறைகளின் உழைப்பால் சேகரிக்கப்பட்டவை எவையுமே-இல்லாதவாறு அழித்து விட்டார்கள் பாசிஸ்டுகள்.

# ஆதாரம்

சமூக, பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழ்

மக்கள் பட்டினி கிடந்தார்கள் - மரித்தார்கள். போரினால் ஏற்பட்ட பெருவிபத்து மக்களை முன்னிலும் நெருக்கமாக ஒற்றுமைப்படுத்தியது.

காட்டின் நடுவே பைன்மரத் தோப்புக்குள் விரட்டப்பட்டு நிலவறை வீடுகளில் வசித்த கிராமத்தினர் வேலைக்குழுக்களாகவும் பிரிவுகளாகவும் அமைத்து வசந்த கால வேளாண்மைக்கு ஆயுத்தம் செய்யலானார்கள்.

தப்பி ஓடிய பிறகு தங்களிடம் மிஞ்சியிருந்த தானியங்களை பட்டினியால் தவித்த குடியானவ மாதர்கள் ஒரு மணி கூட விடாமல் கொண்டு சேர்த்தார்கள். ஜெர்மனியர் கைகளில் அகப்படாமல் உரிய நேரத்தில் காட்டுக்கு ஓட்டி வரப்பட்ட பசுக்களின் கன்றுகளைப் பராமரிப்பதற்கு கண்டிப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆட்கள் பட்டினி கிடந்தார்கள். ஆனால் பொதுக் கால்நடைகளை உணவுக்காக கொல்லவில்லை. உயிரையே இழக்க நேரிடும் அபாயத்தை மேற் கொண்டு சிறுவர்கள் தீக்கிரையான கிராமத்துக்குப் போய் எரிபாடுகளைத் தோண்டி நெருப்புச் சூட்டரல் நீலம் பாரித்திருந்த கலப்பைகளை எடுத்து வந்தார்கள்.

அவற்றில் ஓரளவு உருப்படியாக இருந்தவற்றுக்கு மரக்கைப்பிடிகள் செய்து பொருத்தினார்கள். சாக்குத் துணிகளால் நுகங்கள் செய்தார்கள், வசந்த காலத்தில் பசுக்களைச் கட்டி உழுவதற்காக. பெண்களின் வேலைக்குழுக்கள் முறை வைத்துக் கொண்டு ஏரிகளில் மீன் பிடித்துக் குளிர்காலம் பூராவும் கிராமத்திற்கு அதனால் உணவளித்தன.

பரீஸ் பொலெவோய் எழுதிய ''உண்மை மனிதன் கதை''யில்

## கேள்வி? பதில்!

கேள்வி: தென்னை மரங்களை ஒருவகை வண்டுகள் தாக்கி அழிக்கின்றன. அவற்றினை எவ்வாறு கட்டுப் படுத்தலாம்?

இ. கனகசபாபதி - சாவகச்சேரி.

பதில்: தென்னையை இருவகை வண்டுகள் தாக்குகின்றன. அவையாவன - கருவண்டு, செவ்வண்டு.

### கருவண்டுத் தாக்க அறிகுறி:-

இவ்வண்டு மரத்தின் வட்டுக்குள் சென்று இளம் குருத்துகளை வெட்டி உண்ணும் கூடிய தாக்கம் ஏற்பட்டால் பூந்துணர்களும், சில வேளைகளில் குரும்பைகளும் தாக்கப்படும், வெளியே வரும் இலைகள் கத்தியால் வெட்டியது போல் வெட்டப்பட்டு காணப்படும்.

பண்பாட்டு முறைகளைக் கைக்கொள்வதாலும், பயிர், தோட்ட சுகாதாரத்தைப் பேணுவதாலும் சிறந்த முறையில் இவ்வண்டைக் கட்டுப்படுத்தலாம்.

> மதிப்புக்குரிய வாசகர்களே,
>
> பொருளாதாரம், விஞ்ஞானம், விவசாயம் அபிவிருத்தி, ஆய்வு போன்ற சகல துறைகளிலும் உங்களுக்கு ஏற்படும் கேள்விகளுக்கு அந்தந்தத் துறைசார்ந்த நிபுணர்களிடம் இருந்து பதில்கள் பெறப்பட்டு "ஆதாரம்" சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும். எனவே கேள்விகளை அனுப்புங்கள்.

### பண்பாட்டுமுறை:-

1. இதன் புழு சிதைவடையும் சேதனப் பொருட்களில் காணப்படுவதால் இவற்றை அழித்தல் வேண்டும்.
2. எருவைக் குமித்து வைப்பதைத் தவிர்ப்பதால் இப்புழுக்களின் பெருக்கத்தைக் கட்டுப் படுத்தலாம்.
3. எருக்குவியல்களில் கூடிய புழுக்கள் காணப்பட்டால் B.H.C. தூவிவிடுவதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.
4. இவ்வண்டுகளின் நடமாட்டம் வட்டுக்களில் காணப்பட்டால் கூரிய கம்பியால் குத்தி அகற்றலாம்.

### இரசாயனமுறை:-

1. B.H.C. தூள் மணலுடன் அல்லது மரத்தூளுடன் 1:4 என்ற விகிதத்தில் கலந்து வட்டுக்குள் இடுவதால் இதன் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தலாம்
2. அப்ரெக்கல் 25 என்ற கிருமி நாசினியை 5 தேக்கரண்டி ஒரு லீற்றர் நீரில் கலந்து வட்டுக்குள் விடுவதன் மூலம் கட்டுப் படுத்தலாம்.

### செவ்வண்டு தாக்கத்தின் அறிகுறி:-

இவ்வண்டின் புழுவினாலேயே தாக்கம் ஏற்படுகின்றது. இவ்வண்டு மரத்தின் உள்ளேயுள்ள மென் இழையங்களை உண்ணும். சிறிய துவாரங்கள் மூலம் பிசின் போன்ற பதார்த்தம் வெளிவருவதையும், மரத்தூள்கள் வெளிவருவதையும் காணலாம். தாக்கம் கூடினால் இலைகள் மஞ்சளாகி பின் வாடி விடும். இப்புழு வட்டுப்பகுதியை அடைந்தால் தாக்கம் கடுமையாகி மரத்தின் வட்டு முறிந்து விழும்.

கருவண்டுத்தாக்கத்துடன் செவ்வண்டுத் தாக்கமும் சேர்ந்து இடம் பெறுவதைக் காணலாம்.

### பண்பாட்டுமுறை:-

1. இளம் தாவரங்களை அடிக்கடி அவதானித்துவரல் அவசியமாகும். இரவு நேரங்களில் இப்புழுக்கள் மரத்தினுள் அரிக்கும் சத்தம் கேட்கும். மரத்தில் உள்ள காயங்கள், துவாரங்களுக்கு தார் பூசுதல்
2. தாக்கப்பட்ட மரங்களையும், மரத்துண்டங்களையும் வெட்டி எரித்தல்.
3. இதற்கெனத் தயாரிக்கப்பட்ட பொறிமூலம் இவ்வண்டைக் அழிக்கலாம்.

### இரசாயனமுறை:-

இவ்வண்டின் தாக்கம் ஆரம்பத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டால் ஒரு ஊடுருவும் பூச்சிநாசினியைப் பாவிக்கலாம்.

தாக்கப்பட்ட பகுதிக்கு 10—15 செ. மீற்றருக்கு மேலே துவாரமிடவும். இத்துவாரத்தினுள் புனலைச் செலுத்தி, புனலினுள் 4 தேக்கரண்டி மெட்டிசிஸ் டொக்சை விடவும். கட்டுப்படுத்திய பின் புனலை அகற்றி, துவாரத்தை சிமெந்து மண் கலவை (1:3 கலவை) யினால் அடைத்து விடவும். □

2

கேள்வி: வாழையில் குருக்கன் நோயை எந்த முறையில் கட்டுப்படுத்தலாம்?

பொ. அப்புத்துரை, குமரபுரம், பரந்தன்.

பதில்: இது வைரசினால் ஏற்படுகின்றது.

(அ) இரசாயன முறைக் கட்டுப்பாடு இல்லை.

(ஆ) தாக்கப்பட்ட வாழையை கிழங்குடன் பிடுங்கி எரிக்க வேண்டும். அத்துடன் அந்நிலையத்தையும் குப்பை கூளம் போட்டு நன்கு எரித்துவிட வேண்டும்.

குறிப்பு: தாக்கப்பட்ட நிலையங்களில் திரும்பவும் வாழை நடுவதை தவிர்க்க வேண்டும். □□

ஆதாரம் வாசகர்களே!

தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் கிராமங்கள் தோறும் ஏற்படுத்தப்பட்டுள்ள கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலம் ஆதாரம் சஞ்சிகையுடன் தொடர்பு கொள்ளலாம்.

சமூக, பொருளாதாரம், விஞ்ஞானம், அபிவிருத்தி, எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பான கட்டுரைகள், ஏனைய விடயங்கள் போன்றவற்றை கிராமிய உற்பத்திக் குழுக்கள் மூலமாகவோ, அல்லது நேரடியாகவோ அனுப்பிவையுங்கள்.

**ஆதாரம்**

சமூக, பொருளாதார, விஞ்ஞான ஆய்வு இதழ்,
வெளியீடு:
தமிழீழ ஆய்வு நிறுவனம்
விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி

இரு திங்கள் இதழாக வெளிவரும் ''ஆதாரம்'' சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் இது. தொடர்ச்சியாக ஆதாரம் சஞ்சிகையைப் படித்து வரும் வாசகர்கள், சஞ்சிகை தொடர்பான உங்கள் கருத்துக்களை தவறாமல் எழுதுங்கள் ஆதாரம் முதலாவது இதழில் குறிப்பிட்டது போல ஆக்கபூர்வமான விவாதங்களை ஆரம்பியுங்கள்.

## கிராமிய உற்பத்திக் குழுக்களின் செய்திகள்.

### குளம் புனரமைப்பு.


வவுனியா மாவட்டத்தில் சேமமடு கிராமிய உற்பத்திக்குழுவால், சேமமடுக் குளம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் முழுமையடையும் பட்சத்தில் 600 ஏக்கர் நெற் செய்கை இரு போகங்களுக்கும் செய்யக் கூடியதாக இருக்கும்

### மரம் நடுகை.

வவுனியா மாவட்டத்தில் மாவீரர் வாரத்தினையொட்டி மரம் நாட்டுவதற்காக நாற்றுக்கள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கான பனை விதைகள் பனையற்ற பகுதிகளில் நாட்ட இப்பகுதி உற்பத்திக் குழுக்கள் ஒழுங்கு செய்கின்றன.

### குரக்கன்மா பிஸ்கட்.

யாழ் மாவட்டத்தில் பண்டத்தரிப்பு கிராமிய உற்பத்திக்குழு குரக்கன்மாவை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பிஸ்கட்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இது மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது. பயறுமா, கம்புமா என்பவற்றிலும் இவ் விதமாக பிஸ்கட் தயாரிப்பது பரீட்சார்த்தமாக வெற்றியளித்துள்ளது.




வளர்ப்பிற்கான பன்றிக்குட்டியை தெரிவு செய்யும் பொழுது அவதானிக்க வேண்டியவை.

# மலிவு விலை இறைச்சிக்கு பன்றி வளர்ப்பு.

சங்கரப்பிள்ளை நகுலேஸ்வரன்

புரத உணவுக்கான இறைச்சியை மலிவு விலையில் பெறுவதற்கு பசுக்களும், எருதுகளும் பெருமளவில் கொல்லப்படுகின்றன. பால்வளத்தைப் பெருக்கத் தக்க பசுக்களும், உழவுக்கும், இழுவைக்குமுகந்த எருதுகளும், நாம்பன்களும் இறைச்சிக்காக அழிக்கப்படுதல் தடை செய்யப்பட வேண்டும். இன்றைய சக்தி நெருக்கடி நிலையில் விவசாயம், ஏற்றி இறக்கல் போன்ற செயற்பாடுகளுக்கு மிருக வலுவிலேயே பெரிதும் தங்கியிருக்க வேண்டியுள்ளது.

இராணுவ நடவடிக்கை காரணமான குடி இடப் பெயர்வும், பொருளாதாரத் தடை காரணமான விலங்குணவுத் தட்டுப்பாடுகளும் மந்தை வளர்ப்பைப் பெரிதும் பாதித்து விட்டன. போதிய கால்நடை மருத்துவ வசதியின்மையால்

நோய் தடுப்பு நடவடிக்கையின்றி கால் நடைகளின் இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது. இப்பேரழிவு களைத் தடுக்க விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். இதற்கான அபிவிருத்தி செயல் பாடுகளை மேற்கொள்ளல் காலத்தின் கட்டாயமாகும். இறைச்சித் தேவைக்காக பசு வளத்தை அழிவுக்குள்ளாக்காது மாற்றுவழிகளைத் தேடல் அவசியமாகும்.

## பன்றி வளர்ப்பு:-

மேலை நாடுகளில் பாரிய பண்ணை முறையில் நீண்டகாலமாக பன்றி வளர்ப்பு மேற்கொள்ளப் படுகின்றது. அந்நாடுகளில் பன்றி இறைச்சி பாரிய கைத்தொழில் பதனிடல் நிலையங்களில் உடனுண்ணும் வகையிலும், பாதி பதனிட்ட வகையிலும் பதனிடப்படுகின்றன. இப்புதிய வகை உணவுற்பத்திகள், இவ்வகை நடவடிக்கைகள் தென்னிலங்கையிலும் கணிசமான அளவில் மேற்கொள்ளப்படுகிறன. இன்று பதனிட்ட பன்றி இசைச்சி உணவுகளும், பன்றி இறைச்சியும் தென்னிலங்கை மக்களில் பெரும்பாலானவர்களின் உணவில் சேர்க்கப்படுகின்றது. மக்களிடையே பன்றி இறைச்சி நுகர்வோர் அதிகரிக்கச் செய்கின்றது. பன்றிப் பண்ணைத் தொழிலும் பதனிடலும் உலகெங்கும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமுள்ளது.

தலைநகரையண்மித்த தென்மேற்குக் கரையோர இடங்களின் நீர்கொழும்பை அண்மித்த இடங்களில் வீட்டுப் பண்ணைகளில் அதிகளவில் பன்றிகள் வளர்க்கப் படுகின்றன. உத்தரவு பெற்ற பன்றி இறைச்சி வர்த்தக நிலையங்களும் பெருமளவில் காணப்படுகின்றன. தமிழீழத்தின் மேற்குக் கரையோரப் பகுதியான மன்னாரில்நீண்டகாலங்களாக இறைச்சிக்காகப் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. அண்மைக் காலங்களிலிருந்து குடாநாட்டிலும் சிறிய அளவில் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

எமது பிரதேசத்து மக்களில் பெரும்பாலானவர்கள் காட்டுப் பன்றியை விருப்பத்துடன் உணவில் சேர்த்துக் கொள்ளப் பழக்கப்பட்டுள்ளனர். வீட்டுப் பன்றி இனங்கள் தகுந்த பாரமரிப்பற்ற அருவருப்பூட்டத்தக்க கழிவுகளை உட்கொள்வதால் அதன் இறைச்சியை உணவில் சேர்க்கத் தயக்கம் காட்டினர். இன்று வீடுகளில் ஒழுங்கமைந்த முறையில் பராமரிக்கப்படும் பன்றி இறைச்சியில் ஓரளவிற்கு நாட்டம் கொண்டு வருகின்றனர்.

ஆரம்பகாலத்தில் புறொயிலர் கோழி இறைச்சியை மக்கள் உண்ணத் தயக்கம் காட்டியதும், பிற்காலத்தில் புறோயிலர் கோழிக்கான கேள்விகள் அதிகரித்ததும் இவ்விடத்தில் அவதானிக்கத் தக்கதாகும்.

பன்றி இனங்கள் செலவுகள் அதிகமற்ற உணவுப் பொருட்களை உட்கொண்டு குறுகிய காலத்தில் அதிகளவு இறைச்சியைத் தரத்தக்கவை. ஏனைய கால்நடைகளால் கழிக்கப்பட்ட உணவுகள், சமையலறை கழிவுகள், சந்தைக்கு உதவாத காய் கறி வகைகள் ஆகியவற்றைத் தீவனமாக்கி மிக மலிவான விலையில் பன்றி இறைச்சியைப் பெறலாம். ஏனைய மிருகங்களில் கிடைக்கும் இறைச்சியிலுங் கூடுதல் நிறையுள்ள இசைச்சியைப் பன்றிகளிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் சாரசரி 80—85 சதவிகிதம் வரை இறைச்சியைப் பெறமுடியும்.

பன்றி இனங்கள் 9 மாத வளர்ப்புக் காலத்திலேயே சாரசரி 100 கிலோ நிறையுள்ள இறைச்சியைத் தரத்தக்கவை. ஒரு கிலோ பன்றி இறைச்சியைப் பெறுவதற்கான உணவுச் செலவு ரூபா8 (இந்திய ரூபா) என இந்திய கால்நடை அபிவிருத்தியாளர்களினது ஆய்வுகள் தெளிவு படுத்துகிறது.

புரத உணவுக்கட்டுப்பாடுகளை தவிர்க்கவும். உணவிற்காக பசுக்களை அழித்தலைக் கட்டுப் படுத்தவும் எமது பிரதே

சத்திலும் பன்றி வளர்ப்பு ஊக்குவிக்கப்படவேண்டும். இத்துறையில் ஈடுபடுபவர்கள் பெருமளவு இலாபத்தை பெறத்தக்கதாகவுள்ளதும் பல வழிகளிலும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யோர்க்சயர், பேர்க்சயர் ஆகிய நல்லினப் பன்றிகள் வீட்டுத் தொழுவங்களில் இறைச்சிக்காக வளர்க்க உகந்தவையாகும். இவ்வினங்கள் 8—12 குட்டிகளை ஈன்று இனங்களைப் பெருக்கத்தக்கவை. உட்கொள்ளும் உணவிற்கேற்ப விரைவாக வளரத்தக்கவை. அதிக நிறையுள்ள இறைச்சியையும் தரத்தக்கவை.

## பன்றி வளர்பிற்கான சூழல்:-

வீட்டு நிலங்களிலோ அல்லது பாதுகாப்புள்ளபுறம்போக்கானஇ ங்களிலேயோ தொழுவத்தை அமைத்துக் கொள்ளலாம். ஈரலிப்பானஆ ள்குழிகளுள்ள இடத்தினுள் தொழுவத்தை அமைத்தல் தவிர்த்துக் கொள்ளப்பட வேண்டும். ஈரலிப்புள்ள சுற்றுப்புறங்கள் பன்றி வளர்ப்புக்கு மிக உகந்தவை. முழு வளர்ச்சியுற்ற ஒரு பன்றிக்கு 4. ச. மீ. பரப்பளவு என்ற பிரமாணத்தில் தொழுவத்தின் தள அளவு கணக்கிடப்பட வேண்டும். சிமெந்திலான தளங்கள் சிறந்தது. தண்ணீர்த் தொட்டிகள் தொழுவங்களுக்கு மிக அருகில் அமைத்தல் வேண்டும். குட்டி ஈனுங் காலத்தில் தாய்ப்பன்றியைத் தவிர்த்து விடத்தக்கதாக தடுப்புக்கள் அமைக்கப்பட வேண்டும்.

தொழுவத்தைக் காற்றோட்டமுள்ளதாகவும், சூரியவெளிச்சமுள்ளதாகவும் அமைக்க வேண்டும். கூரையின் அரைப் பகுதிமூடப்பட்டும்மிகுதி வெளியாகவுமிருத்தல் வேண்டும். தொழுவங்களின் பக்கச் சுவர்கள் 1½ மீ. உயரத்தைக் கொண்டதாக, நடுப்பகுதி காற்றோட்டதிற்குகந்த வெளியைக் கொண்டிருக்க வேண்டும்.

## இனவிருத்தி:-

பருவமடைந்த ஆண், பெண் பன்றிகளை தனித்தனியே வளர்த்தல் சிறந்தது. 8 மாதங்கள் வளர்ச்சியுற்றுப் பருவமெய்திய பெண் பன்றிகளை ஆரோக்கியமான கிடாய்ப் பன்றியுடன் சேர்க்க வேண்டும். பருவந் தெரிந்த நாளும் மறு நாளும் சேர்த்தல் நன்று. பன்றிகள் ஆண்டொன்றில் இரண்டு பருவகாலங்களில் சினைப்படக் கூடியவை (இரண்டு ஈற்றுக்கள்) 1. மார்ச்சு – ஏப்பிறல் 2. செப்தெம்பர் – ஒக்டோபர், 115 நாட்களில் குட்டிகளை ஈனும். குட்டி போடும் பன்றியைத் தனியே பிரித்து விட வேண்டும். முலைக்காம்புகளில் பால் தோன்றிய 24 மணித்தியாலங்களுக்குள் குட்டியை

இறைச்சிக் கோழிகளை புறோயிலர் கோழிகள் என்று குறிப்பிடுவர். எமது மக்கள் காலம் காலமாக வீட்டுக் கோழிகளையும், சேவல் கோழிகளையும், காட்டுக் கோழிகளையுமே இறைச்சிக்காக வளர்த்தும் பாவித்தும் வந்தார்கள். ஆனால் அண்மைக்காலம் தொட்டு வெளிநாட்டுத் தொடர்புகளால் வர்த்தகரீதியில் இவ் புறோயிலர் உற்பத்தி பெருகத் தொடங்கியது. இன்று எம்மக்கள்கூட புறொயிலர் உற்பத்தியை மேம்படுத்தி அவ் இறைச்சியை விரும்பி உண்ணப் பழகிவிட்டார்கள் கோழி இறைச்சி விலை உயர்ந்ததாக இருந்தாலும் இலகுவில் பெறக்கூடியதாலால், சுலபமாகக் கோழிகளையும் வளர்த்து விற்பனை செய்துகொள்ளலாம்.

ஈனும் எல்லாக் குட்டிகளையும் ஈன்று முடிப்பதற்கு 6 மணித்தியாலங்கள் வரை காலமெடுக்கும்

எல்லாக் குட்டிகளினதும் கொப்புள் கொடியைக் கத்தரித்து நுண்ணுயிர் நீக்கியொன்றினைக் கொண்டு சுத்திகரித்தல் அல்லது பூசுதல் நன்று. குட்டிகளை ஒரு வாரம் வரை பிரத்தியேக கவனமெடுத்துப் பாரமரித்தல் நன்று. தாய்ப்பால் குறைவான விடத்து அல்லது தாயில்லாத குட்டிகளுக்கு உலர்த்திய பால்மா கரைசலில் சீனியும் உயிர்ச்சத்துக்களும் சேர்த்து ஊட்ட வேண்டும்.

இளங் குட்டிகள் இரத்த சோகை நோய்க்குட்படாதவாறு பாரமரிக்க வேண்டும். குட்டிகள் சாதாரணமாக இந்நோய்யினால் தாக்கப்பட்டு இறந்து விடுகின்றன. தாய்ப்பாலில் இரும்புச்சத்து குறைவினாலும், சிமெந்து நிலங்களில் வளர்ப்பதாலும் இந்நோய் உண்டாகின்றது. புல் தரைகளில் மேய்ப்பதன் மூலமும், தாய்ப்பன்றியின் மடிகளில் இரும்புச்சத்து நிறைந்த கலவைகளைப் பூசுவதன் மூலமும், குட்டிகளின் இறப்பைக் கட்டுப்படுத்தலாம். மூன்று வாரங்களின் பின்னர் இளம் பன்றிகளுக்கு வேறு தீவனங்களைக் கொடுக்கலாம். நான்கு வாரங்களின் பின்னர் இளம் பன்றிகளைப் பிரித்து வளர்க்கலாம். வளர்ந்த பன்றிக்கு மூன்று கிலோ அளவை செறிவுத் தீவனம் சேர்க்கப்பட வேண்டும். புரதத்தின் அளவு 16% வீதம் இருக்க வேண்டும். பன்றி இனங்களை ஆரோக்கியம் நிறைந்ததாகவும். ஒழுங்கமைந்த முறைகளிலும் பராமரிக்க வேண்டும்.

- O உபயோகமற்ற ஆண்பன்றிகளுக்கு மூன்று வாரங்களின்பின்னர் அண்மை நீக்கிவிடல்.
- O குடற்புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கான மருந்து வகைகளை ஊட்டுதல்.
- O பன்றிக்காய்ச்சல் *(Suine Fever* எரிசிமிலஸ் *(Suineerusipelas)* கோமாரி *(foot and mouth)* அடைப்பான் *(Onthrox)* போன்ற நோய்களைக் கட்டுப்படுத்த காலநடை வைத்தியறை அணுகுதல்.
- O தடுப்பூசிகளை உரிய காலத்தில் போடுதல்.
- O கட்டாக் காலியாக அலைவதைத் தடுத்தல் (கட்டாக் காலியாகத்திரியும் பன்றிகள் கொடிய தொற்று நோய்க் கிருமிகளைக் காவி மனிதனுக்கு தீங்கினை விளைவிக்கும்)

தொகுப்பு:- *INDIAN JDURNAL OF ANIMAL SCIENCE - ICAR NEWDELHI.*

தமிழ் நாட்டு கால் நடை இயக்க வெளியீடு - 1986 □

### பன்றிக் கழிவுகள்

பன்றியின் மலம் சேதனச் சிதைவுகளுக்குள்ளாகி அதிகளவில் உயிரியல் வாயுவை வெளியேற்ற வல்லவை. உயிரியல் வாயு கூடத்திற்கு உபயோகப்படும் ஏனைய விலங்குகளின் கழிவுகளிலும் அதிகளவில் வெளியீட்டைத்தரத்தக்கவை. உயிரியல் வாயுவை அதிகளவில் பெற்றுப் பயன்படுத்தும் சீனா, மலேசியா போன்ற தேசங்களில் பன்றி பண்ணைக்கழிவுகள் பெருமளவு பயனைக் கொடுக்கின்றது.

பா. சந்திரகுமார்

"காடு அழிவதனால் ஏற்படும் தீங்கைக் கருத்திற் கொண்டு பச்சை மரங்களை வெட்டுவதை நிறுத்துதல் எமது பிரதேசத்திற்குச் செய்யும் பெரிய தொண்டாகும்."

# மரம் மண்ணின் வரம்.

ஆதி மனிதனுக்கு புகலிடமும் உறையுளும் உடையும் உணவும் தந்தது மரம் தான். நாடோடியாகத் திரிந்த மனிதன் நாகரீகத்தை தழுவுமுன் மரத்தின் மீதும் மரநிழலிலுமே வாழ்ந்து வந்தான்.

கற்காலத்துக்கு முன் வாழ்ந்தவனிற்கு பழங்கள் தந்து உதவியது மரமும் மற்றை செடிகொடிகளுமே, அதே போல் இன்று விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களுக்கு மரங்களின் பயன்பாடு மிகமிக அவசியமானது. மரவளத்தை அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டியதும் எமது அனைவரதும் கடமையாகும்.

தமிழீழத்தை பொறுத்தவரை யாழ்ப்பாணம் தவிர்ந்த எனைய மாவட்டங்களில் காட்டுவளத்துக்கு குறைவில்லாமல் இருந்தது. ஆயினும் பல தேவைகளுக்காக அன்றாடம் காடுகள் அழிக்கப்படுவது எம் எதிர்கால வாழ்க்கையில் பாரிய பெரும் தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதை எவரும் சிந்திக்கவில்லை என்றே கூறவேண்டும். வடமராகாணத்தை பொறுத்தவரை காட்டு வளத்தை நோக்கும் போது:

| மாவட்டம் | காட்டு நிலப்பரப்பு | அழிக்கப்பட்ட பரப்பு | வீதம் | 1990 ஆண்டின் நிலப்பரப்பு |
|---|---|---|---|---|
| கிளிநொச்சி | 226261 ஏக்கர் | 62082 ஏக்கர் | 27% | 164199 ஏக்கர் |
| முல்லைத்தீவு-பெ.காடு | 196927 ,, | | | 196927 ,, |
| ஏனைய | 158690 ,, | | | 158640 ,, |
| மன்னார் பெ. காடு | 137865 ,, | 47300 ஏக்கர் | 34% | 90565 ,, |
| ஏனைய | 127790 ,, | | | 127790 ,, |
| மீள்நடுகை | 692 ,, | | | 642 ,, |
| வவுனியா பெ. கா. | 112782 ,, | 14366 ஏக்கர் | 12% | 98416 ,, |
| ஏனைய | 1869 ,, | | | 1869 ,, |
| யாழ்ப்பாணம் | புதர்கள் சிறு காடுகள் | | | 12000 ,, |

ஏனைய சிறுகாடுகள்

| | | |
|---|---|---|
| முள்ளியான் | 2800 | ஏக்கர் |
| சுண்டிக்குளம் | 3200 | ,, |
| கோவில் வயல் | 700 | ,, |
| நெல்லியான் | 1500 | ,, |

இந்தப் புள்ளி விபரத்தின்படி மன்னாரில் 34%மும் கிளிநொச்சியில் 27% வவுனியா மாவட்டத்தில் 12% முமான காடுகள் அழிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக பின்வரும் தேவைகளுக்காக காடுகள் அழிக்கப்படுகின்றன.

1. விறகுத்தேவைக்காக.
2. வீட்டுத்தளபாடங்கள்
3. சேனைப்பயிர்ச் செய்கை.

விறகுத் தேவைக்காக மரங்கள் வெட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும் விறகு வெட்டித் தொழில் செய்வோர் இத்தொழிலை கைவிட்டு வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடலாம் மக்கள் விறகுக்குப் பதிலாக உமி, உயிர்வாயு, இது போன்ற மாற்று எரிபொருளை பாவித்து விறகு பாவனையை குறைக்கும் போது காட்டழிவை ஓரளவு கட்டுப்படுத்தக்கூடியதாய் இருக்கும்.

எனவே மக்களும் காடு அழிவதனால் ஏற்படும் தீங்கைக் கருத்திற் கொண்டு பச்சை மரங்களை வெட்டுவதை நிறுத்துதல் எமது தேசத்திற்கு செய்யும் பெரிய தொண்டாகும்.

அடுத்து வியாபாரத்துக்காக மரங்கள் அரியப்படுகின்றன. வீடு கட்டுவதற்கு மரம் முக்கியமானதாக இருப்பதாலும், வீட்டுத் தளபாடங்களுக்கு மூலப் பொருளாக மரம் காணப்படுவதால் இந்த வேலைக்காக மரம் அரியப்படுகின்றது. இந்த தேவைகளுக்காக மரத்தேவையை சுருக்குவதற்கும் மக்கள் முனைய வேண்டும்.

பயிர்ச் செய்கைக்காக அழிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டியதொன்றாகும். எவ்வளவோ நிலப்பரப்பு தேடுவாரற்றுக் கிடக்க பயனுள்ள காடுகளை வெட்டி சேனைப்பயிர் செய்கை செய்வது எம் கண்ணையே நாம் குத்துவது ஒப்பாகும். ஆகவே மக்கள் காடுகளை அழித்து சேனை செய்வதை குறைத்து காடற்ற பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டால் நாட்டுக்கு நலம் பயக்கும்.

குடியேற்றங்கள் பொதுவாக காடழிக்கப்பட்டே உருவாக்கப்படுகின்றன. இதைத் தவிர்க்க வேண்டியது அவசியம். மன்னார்

வவுனியா, கிளிநொச்சி பிரதேசங்களில் குடியேற்றத்திற்காக காடுகள் அழிக்கப் பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

1. பச்சை வண்ண இலைகளையுடைய தாவரங்கள் சூரிய ஒளிக்கற்றையி லிருந்து சக்தியை எடுத்து ஒளிச்சேர்க் கையின் மூலம் பல சத்துப் பொருட் களை தயாரிக்கின்றன. ஒளிச்சேர்க்கை யின் பயனாக தயாரிக்கப்படும் சத்துக் களே உயிரினங்களுக்கு உணவாகப் பயன்படுகின்றன. பூமியில்நடைபெறும் மொத்த ஒளிச்சேர்க்கையில் பாதி அள வுக்கு மேல் மரங்களாலேயே விளை கின்றது. பூமித்தாயின் ஆடை என வருணிக்கப்படும் இந்த மரங்கள் ஒட் சிசனும் கரியமில வாயுவும் காற்று வெளியில் ஏற்ற இறக்கங்கள் இன்றி சீரான விகிதத்தில் இருக்க உதவுகின் றன.

2. இயற்கை பொருள் உற்பத்தியில் மரங் களின் பங்கு மிகப் பெரிது மரங்களி னின்று உதிரும் இலைகள் மண்ணின் வளத்தைக் கூட்டுகின்றன.

3. நிலப்பரப்பை ஆதிக்கம் செலுத்தி மரங்கள் காடுகளாய் ஆக்கிரமிக்கின் றன. அடர்த்தியான இந்த மரங்களை மழையின் தாக்குதலை தாங்கி வேகத் தைக் குறைத்து மென்மைத்துளிகளாக நிலப்பரப்பில் விழச்செய்கின்றன. இத னால் மண்ணின் தன்மை மிருதுவாகின் றது. மேலும் மரங்களை அமைந்த நிலப்பரப்பு தண்ணீர் சேமிப்புக் கிடங் காக செயற்பட்டு பூமியின் அடித்தளத் தில் நீர்மட்டம் இறங்காமல் இருக்க வழி செய்கின்றது.

4. மரங்கள் பாதுகாப்பான அரனாகவும் பயன்படுகின்றன. காற்று வேகமாக வீசும் பகுதிகளில் உயர்ந்து வளர்ந்து பரந்து நிற்கும் மரங்கள் காற்றின் வேகத்தை தடைசெய்து பூமியின் உயி ரினங்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்றன. கடற்கரை பிரதேசங்களில் வளர்ந்து இருக்கும் காடுகள் பெருமழை, புயல் காலங்களில் காற்றையும் உயர்ந்தெழும் கடலையும் தடுத்து நிறுத்துகின்றன.

5. பேப்பர், நூல்கள், மரத்தளபாடங்கள் என்பவற்றுக்கு மூலப்பொருளாக அமை வதும் மரங்களே.

6. நிழல்தரும் மரங்கள் சாலையின் இரு மருங்கும் பூத்துக் குலுங்கும் போது மனதுக்கு இதமாக இருக்கின்றன. தோட்டங்களில் பழங்களைத் தந்தும் தோப்புகளில் பொருளாதாரம் பெருக் கும் உணவுப் பொருளான புளி, எண் ணைப் பொருட்களையும் மரங்கள் தந்துதவுகின்றன.

7. மனிதனுக்கு மட்டுமா மரங்கள் பயன் தருகின்றன. பறவைகளின் புகலிட மாகவும், விலங்குகளின் கூடாரமாகவும் விளங்கப்படுகின்றன. உயிரினங்களுக்கு அடைக்கலம் தருதல் மரங்களின் அற மாகும்.

8. மரங்கள் தட்ப வெப்பநிலையை நிர்ண யிக்கின்ற சேவையும் செய்கின்றன. மழை பெய்யவும் வெப்பத்தை சீராக் கவும் மரங்கள் பயன்படுகின்ற கார ணத்தால் தானே மழை பொழிய மரம் நடு என்ற விளம்பரங்கள் மக்கள் முன் வைக்கப்படுகின்றன.

9. மரங்கள் பூமியின் அடியில் இருக்கும் தண்ணீர் உப்பு சத்து மண்ணின் வளம் செப்பு போன்ற தாதுப்பொருட்களின் இருப்பை எடுத்துக் காட்டுகின்றன மானியாக விளங்குகின்றன.

10 எதையும் பணத்தின் மூலம் கணக்குப் போடும் மனிதஇனம் மரங்களின் பய னையும் விட்டு வைக்கவில்லை. ஒரு மரம் 50 ஆண்டு காலம் வாழ்ந்தால்

5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஓட்சிசனை உற்பத்தி செய்கின்றது என்றும், 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அளவிற்கு மண்ணின் வளத்தை கூட்டுகின்றது என்றும், 6 லட்ச ரூபாய் மதிப்புக்கான புகலிடத்தை பறவை போன்ற உயிரினங்களுக்கு வழங்குகின்றன என்றும், ஒரு லட்ச ரூபாய் புரதப் பொருளை சேகரிக்கின்றது என்றும், கணக்கிடப்பட்டுள்ளது. 50 ஆண்டு வாழும் மரத்திற்கே இந்த மதிப்பென்றால் 100 ஆண்டு காலம் என மூன்று அல்லது தலைமுறைகளுக்கு வாழும் மரங்களின் மதிப்பு எத்தகையது என்று எண்ணிப் பாருங்கள்.

தமிழீழப் பிரதேசங்களைப் பொறுத்தவரை அதுவும் வடமாகாணத்துள் யாழ்ப்பாணத்திலே காடுகள் அதுவும் சிறு சிறு பற்றைக் காடுகளே உள்ளன. அபூர்வமாக அரும் மருந்தைப்போல இருக்கும் காடுகளை கூட மக்கள் தங்கள் விறகுத் தேவைக்கு வெட்டி அழிப்பதனை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. மக்களே தயவு செய்து இப் பிரதேசம் பாலைவனமாக மாறுவதற்கு நீங்கள் உடந்தையாக இருக்காதீர். காடுகளை அழிக்காதீர்கள். உள்ளூரில் இருக்கும் மரங்கள் வேலியில் இருக்கும் மரங்கள்கூட இன்று வெட்டப்படுவது வருந்தத்தக்க விடயமாக இருக்கின்றது. இந்த நிலை மாறி மக்கள் தேசிய நோக்கத்துடன் மரங்கள் அழிப்பதை தவிர்த்து புதிது புதிதாய் வேலிக் கரைகளிலும் சாலை ஓரங்களிலும் மரங்களை நட வேண்டும். மரங்களை நடுவதன் மூலம் உங்களுக்கும் உங்கள் பரம்பரைக்கும் தேசத்திற்கும் அரும் தொண்டாற்றுகிறீர்கள் என்பதை மறந்து விடாதீர்கள். ☐

## சமுத்திரா தொழிலகம்

மூளாய் பொன்னாலை பகுதியில் அமைந்துள்ள இத் தொழிலகம் முழுக்க முழுக்க கடல் உற்பத்தியில் பொருட்களைக் கொண்டு சில பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது. கடற் தொழிலாளர்களின் கூட்டு முயற்சியாலும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் பக்க பலத்துடனும் இத் தொழிலகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தாங்களே ஆராய்ச்சியில் ஈடுபட்டு பொருட்களை உருவாக்கியுள்ளனர்.

1. சமுத்திரா மச்ச உணவு

இது ஒரு பையில் அடைக்கப்பட்ட கறியுணவு. பார்ப்பதற்கு சோயாமீற் போன்று இருக்கும் சுவை அதனையும்விட அதிகம். இதற்கு மூலப் பொருள் மீன் ஆகும். இதை ஊறவிட்டு கறி சமைக்கலாம் அல்லது பொரிக்கலாம்.

2. இறால்வடகம்

இறால் உழுந்து காரம் என்பன கலந்து தயாரிக்கப்பட்டது. இது பொரித்து சாப்பிட மிகச் சுவையாக இருக்கிறது.

3. மீன்பொடி

இது மீனைக் காயவைத்து பொடி செய்யப்பட்டது. சம்பல், மரக்கறி போன்றவற்றில் கலந்து சமைக்கலாம்.

இத்தகைய முயற்சிகள் வரவேற்கத் தக்கது. தமிழீழத்தின் இன்றைய பொருளாதார நெருக்கடியை ஈடு செய்வதில் தமிழ் மக்கள் முனைப்புடன் செயற்படும் போது தலை நிமிர்ந்து நிற்கலாம்.

# தமிழீழத்தில், சிறுகைத்தொழிலாளர் எதிர்கொள்ளும், பிரச்சனைகளைத் தீர்க்க முயல்வோம்.

ச. சுப்பிரமணியம்

எமது பிரதேசம் இன்று எரிபொருட் தடையினாலும், மூலப்பொருள், ஏனைய பொருட்தடையினாலும் பெரும பாதிப்புக் குள்ளாகியுள்ளது. இந்நிலையால் உற்பத்தி களின் தரத்திலும், அளவிலும், மட்டு மன்றி எடுத்துச் சென்று சந்தைப் படுத்து வதிலும் பெரும் இடைஞ்சல்களை உற்பத் தியாளர் எதிர்கொள்கின்றனர். மேற்கூறிய காரணிகளால் தொழில் பாதிப்புக்குள்ளா கின்றது என்பதற்காகத் தொழிலகங்களை மூடவும் முடியாது. இதனால் பலர் வேலை வாய்ப்பை இழப்பதோடு உள்ளூர்ப்பொரு ளாதாரமும் பாதிப்புறும்.

எனவே தான் இவ்வாறான இக்கட்டு களுக்கு மத்தியிலும் சிறுதொழிலகங்களை நடாத்த வேண்டியுள்ளது. எனவே சிறு தொழிலாளர் எதிர்கொள்ளும் பல பிரச் சனைகளைப் பலரும் அறிவதனால் தமது சரியானதும் உச்ச அளவினதான பங்களிப் பைச் செய்வதன் மூலம் சுயபொருளா தாரத்தைக் கட்டிக்காக்க முடியும் என்ற எண்ணத்தில் இக்கட்டுரை எழுதப்படு கின்றது.

பிரச்சனைகளும் - தீர்வுகளும்

1. பொருளின் தரம் பார்க்கும் நாம் எம்மைத் தரமுடையவராக்கல் அவசியம்

இறக்குமதியாகும் மூலப்பொருள் உப பொருட் தட்டுப்பாட்டினால் உற்பத்திப் பொருட்களின் தரம், அளவுகள் மாற்ற வேண்டியுள்ளது உதாரணம்; பிஸ்கட் எனும் உற்பத்தியை உள்ளூர் தானியங்களான குரக்கன், பயறு போன்றவற்றையும் பொருத்தமான வெண்ணையையும் பயன்படுத்தும்போது பிஸ்கட்டின் நிறம், அளவு, சுவை என்பன வழமையை விட மாற்றமடையும். கோதுமைமா பிஸ்கட்டுச் சுவைக்கும், சிறந்த பொதியாக்கல் முறைக்கும், அழகிய விளம்பரங்களுக்கும் பழக்கப்பட்டுப் போன நாம் உள்ளூர் உற்பத்திகளை அவற்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் குணம், மனப்பாங்கு மாறவேண்டும்.

இறக்குமதியாகும் பொருட்களுக்குச் சமமாகச் செய்ய முடியாத தொழில்நுட்ப பற்றாக் குறையல்ல இக்காரணிகள். உதாரணமாகப் பொதியாக்குவதற்குப் பயன்படும் பொலிதீன் தாளுக்குப் பெரும் தட்டுப்பாடு இங்கு உண்டு. இவற்றைச் செய்துதர இங்கு எத்தனை புத்தி ஜீவிகள் முன்வருவார்கள் என்றால் யாருமேயில்லை ஆனால் தரம் பற்றிக் கதைப்பதற்கும் தரநிர்ணயம் இல்லை. என்று கூக்குரலிடவும் இங்குபலருண்டு.

எனவே உள்ளூர் உற்பத்திகளை நாம் மதிக்கும் ஊக்குவிக்கும் கொள்வனவு செய்யும், எம்மை உற்பத்திகளுக்கு அமைய இசைவுபடுத்தும் மனப்பாங்கை வளர்த்துக் கொள்ளவேண்டும். நாம் நிறையப் படித்துள்ளதாக மார்புதட்டும் பலர் அவற்றைச் செயல் முறையாக்க முன்வராதது ஏன்? இனியாவது முயல வேண்டும்.

2. உள்ளூர் உற்பத்தியாளரும் வியாபாரிகளும்

உற்பத்தியாளர் சிறுமூலதனத்துடன் தொழிலை ஆரம்பித்துப் பொருட்களை உற்பத்தி செய்து சந்தைக்கு எடுத்துச் சென்றால் அவன் எதிர்கொள்ளும் பிரச்சனைகளோ அதிகம். அவையாவன;

1. பொருளின் தரம் பற்றித் தரக்குறைவாகப் பேசுதல்:

கொழும்பு உற்பத்திகளுடன் ஒப்பிட்டுக் கதைத்தல், அவற்றின் சுவை பற்றியோ, பொதியாக்கும் முறைபற்றியோ, தரப்படும் கமிசன்பற்றியோ, விளம்பரம்பற்றியோ, எல்லாம் ஒப்பிட்டு எவ்வளவுக்கு அவற்றை மட்டம் தட்டிக் கொள்ளையடிக்க நினைக்கும் பண்பு மாற வேண்டும். இன்றைய உண்மை நிலையை விளங்கி உள்ளூர் உற்பத்திக்கு ஊக்குவிக்க வேண்டுமே தவிர உற்சாகமிளைக்கச் செய்தலானது.

2. உற்பத்திகளைக் கடனாகப் பெற்று விற்பனைசெய்ய முயற்சித்தல்:

இறக்குமதியாகும் பொருட்களுக்கு எத்தனைமடங்கு விலையானாலும் உடன் காசு கொடுத்து(முதலிட்டு) வியாபாரம் செய்ய முயற்சிப்பவர் - உள்ளூர் உற்பத்தி என்றதும் முதலில்லாத வியாபாரம் செய்து லாபம் பெற முயற்சித்தல் மட்டுமன்றி, விற்பனை செய்து வந்த பணத்தைஉற்பத்தியாளர்களுக்கு கொடுக்காமல் வேறு கொள்வனவுக்குப் பயன்படுத்தி,மேலும்மேலும் லாபமீட்ட முயற்சிக்கின்றனர்

இந்த நிலை மாறவேண்டுமானால் வியாபாரிகள் உள்ளூர் உற்பத்திகளை உற்சாகத்துடன் காசுக்குக் கொள்வனவு செய்து, இப் பொருள் எமது உள்ளூர் உற்பத்தி என்று பாவனையாளருக்கு

அறிமுகம் செய்து, விளம்பரம் செய்து விற்பனையை அதிகரிக்க வழி செய்ய வேண்டும். உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்குப் பதிலீடான இறக்குமதிகளைக் குறைத்து இறுதியில் முற்றுமுழுதாக நிறுத்த முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறான உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்புக்கான உணர்வு ஒருதேசியஉணர்வு மிக்கவனால் மட்டுமே வெளிக்காட்ட முடியும். எமது நாட்டில் நீண்டகாலமாக 40% குறையாத மாணவர்கள் வர்த்தகம், பொருளியல் கற்றறிந்தும் எமது பிரதேச வர்த்தகர்கள் இன்னமும் தேச உணர்வு குன்றிச் செயற்படுவது கவலைக்குரிய விடயம் ஆகும்.

3. உள்ளூர் உற்பத்திகளைக் கொள்வனவு செய்யும தேசஉணர்வு மக்களிடம் வளர வேண்டும்.

பாவனையாளரின் கொள்வனவுக்குரிய பணமானது அவரின் உழைப்பில் வந்தது எனின் அது பெறுமதி மிக்கது. அப்பணத்தைக் கொண்டு தனது அத்தியாவசிய தேவையை நிறைவு செய்யக் கொள்வனவு மேற்கொள்ளப்படும் அப்பொருள் அவரின் தேவைகளை நிறைவு செய்யுமானால் அதற்கு நியாயமான விலை கொடுக்கப்படும்.

எனவே நாம் இறக்குமதியாகும் பொருள் என்ற மாயையில் கொள்வனவு செய்யும் பொருளுக்கான பெறுமானத்திலும்பலமடங்கைக் கொடுத்துக்கொள்வனவு செய்யும் நிலை மாறவேண்டும் குறைந்த விலைக்கு உள்ளூர் பொருள் என்றதும், அது தரக்குறைவானது எனும் எண்ணம் மாறவேண்டும் அது போலவே இறக்குமதியாகும் பொருளிலும் பார்க்கச் சிறிதளவு விலை உயர்வு என்றாலும் அது உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பு என்பதற்காகவும், எமது பணம் எமது நாட்டிற்குள் நிற்க வேண்டும் என்பதற்காகவும் உள்ளூர் உற்பத்தியையே கொள்வனவு செய்ய முயற்சிக்க வேண்டும். உங்களின் தேசிய உணர்வை வெளிக்காட்ட இங்கு ஒரு சந்தர்ப்பமாகக் கொள்ள வேண்டும். அது ஒரு குடிமகனின் கடமை எனக் வேண்டுமேயன்றிக் கணக்குப் பார்த்து நீண்டகால சுயபொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கச் செய்யலாகாது.

4. அளவுக்கதிகமான விற்பனைத் தரகைப் பெற வியாபாரிகள் பெறமுயற்சித்தல்.

ஒரு உற்பத்தியாளன் 40 சதத்துக்கு ஒரு பொருளை உற்பத்திசெய்து லாபம் எல்லாம் வைத்து 45 சதத்துக்கு விற்கச் சென்றால் வியாபாரி அதை மேலும் 30 — 40% லாபம் வைத்து விற்க முயற்சிக்கும் முறை மாறவேண்டும். இதனால் உற்பத்தியாளனைவிட விற்பனையாளன் அதிக லாபம் பெறுகிறார். விற்பனை விலை அதிகரிக்கிறது பாவனையாளர்கள் கொள்வனவைக் குறைக்கின்றனர். உற்பத்தி தேக்கமடையும். இறுதியில் தொழிலகம் மூடப்படும், இந்நிலை மாறவேண்டும்.

நியாயமான அளவு லாபம் வைத்து விற்பனை செய்ய முயற்சிப்பதால் பாவனையாளர்கள், உற்பத்தியாளர்கள் விற்பனையாளர்கள் மூவருமே நன்மை பெறுகின்றார்கள். என்பதையுணரவேண்டும். வியாபாரம் என்பது ஏனையவரை இயன்றளவு சுரண்டல் என்று செயற்படாது மக்கள் சேவை எனக் கொண்டு செய்ய முயற்சிக்க வேண்டும் ☐

# அ. கௌரிகாந்தன்

மூன்றாம் உலக நாட்டுக்குப் பொருத்தப் பாடான தொழிற்துறை குணாம்சங்கள் அனைத்தையும் கொண்டுள்ள, இந்தப் பனையை போற்றிப் புகழ்வது ஒன்றும் தப்பில்லை. பனையை ஏன் நாம் முழுமையாகப் பயன்படுத்த தவறினோம் என்ற கேள்வியின் முக்கியத்துவம் இப்போதுதான் மேலும் அதிகரிக்கின்றது.

தமிழீழத்துக்கு வெளியே உள்ள சக்திகள் தான் எம்மைத் தடுத்து வந்தனவா? அல்லது தமிழீழத்துக்கு உள்ளே உள்ள நிலமைதான் இதற்கு காரணமா?

காலக் கோலமாகிவிட்ட பதில் (ஃபஷன்)

எடுத்த எடுப்பில், எழுந்த மானமாக சிங்கள பேரின வாதத்தின் மேல் அனைத்துப் பழியையும் சுமத்துவதே தமிழீழத்தின் சராசரி மனிதனது காலக் கோலமாகி விட்டது

1970களில் கரும்புச்சீனி இறக்குமதி தடை செய்யப்பட்டது. அந்நிய செலவாணி விரயத்தை கட்டுப்படுத்துவதற்காக உள்ளூர் சீனி உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இந்நடவடிக்கையால் தமிழீழத்தில் சீனி உற்பத்தி பெருகியது. பனங் கருப்பட்டித் தொழிற்சாலைகள் பல இடங்களிலும் முளைத்தன. ஆனால் 1977ல் சீனி இறக்குமதிக்கு மீண்டும் இடமளிக்கப்பட்டதன் பின் கருப்பட்டித் தொழிற்சாலைகள் அனைத்தும் பூட்டப்பட்டன. மீண்டும் இறக்குமதியான கரும்புச்சீனி தாராள பாவனைக்கு வந்தது.

சீனி இறக்குமதி தடை செய்யப்பட்டிருந்த இந்தக் காலகட்டத்தை சற்று நோக்குவோம். பதுளை மொனறாகலை ஆகிய மாவட்டங்களில் கரும்புச் சக்கரை உற்பத்தி பரவலாக வளர்ந்தது போல் வட தமிழீழத்தில் பனங்கருப்பட்டி அல்லது பனஞ்சீனி உற்பத்தி பரவலாக வளர வில்லை. ஆனால் இதே ஆண்டுகளில் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டிருந்த வெங்காயம், மிளகாய் போன்ற பயிர்களின் பயிற்செய்கை பல பத்து மடங்காக அதிகரித்தன. பல்வேறு திட்டமிட்ட தடங்கல்களின் மத்தியிலும் இப் பயிற்செய்கைக்கான ஊக்கம் குறைந்து விடவில்லை. சாதி, சமய, சமூக அந்தஸ்து ஏற்றத் தாழ்வின்றி அனைவரும் இப் பயிற் செய்கையில் ஈடுபட்டனர், இன்றும் ஈடுபட்டு வருகின்றனர். போர்க்கால சூழலில் இவ் விவசாயப் பொருட்களுக்கான விற்பனவுச் சந்தை நிச்சயமற்ற நிலையிலும் இவ் உற்பத்தியிலான நாட்டம் குறையவேயில்லை.

# பனை

## சாதியின் ஓர் நெம்புகோல், சாதியின் ஓர் ஆப்பாகின்றது.

பசுப் பால் உற்பத்தியை எடுத்துக் கொள்வோ வடதமிழீழ பால் உற்பத்தியை ஊக்கப்படுத்துவதில் சிறிலங்கா அரசாங்கம் இன்று எந்த முயற்சியும் எடுக்கவில்லை ஆனாலும் மக்கள் தளர்ந்து விடவில்லை. வீட்டுக்கு ஒரு பசுவாது அதுவும் இல்லையேல் குறைந்தது ஒரு ஆடாவது வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளது. அதற்காக முயற்சித்தும் வருகிறார்கள். கால்நடை வளர்ப்பை ஒரு குடிசைத் தொழிலாகக் கொள்வதில் வட தமிழீழம் ஒரு பிரதான இடத்தை வகிக்கிறது.

கோழி வளர்ப்பை எடுத்துப் பார்ப்போம், வட தமிழீழ மக்கள் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் இதில் அதிக கரிசனை காட்டினார்கள். கோழி வளர்க்காத வீடுகள் பிழைக்கத் தெரியாதவர்கள் என்று நோக்கப்பட்டார்கள். வீட்டுக்கு வீடு சிறு சிறு கோழிப் பண்ணைகள் தோன்றின. கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும் ஆரம்பமாகின. கோழித்தீன் உற்பத்தித் தொழிற்சாலைகளும் தோன்றின.

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கையை நோக்குவோம். வீட்டுத் தோட்டப் பயிற்செய்கை வட தமிழீழ மக்களுக்கு கனி வகைகள், பருப்புவகைகள், தானியங்கள், மரக்கறிவகைகள், கிழங்குவகைகள் போன்றவற்றை வீட்டுத் தோட்டமாக பயிர் செய்தல் புதிதாக அறிமுகப்படுத்த வேண்டிய ஒரு விடயமல்ல அதுவும் குறிப்பாக வறிய விவசாயிகளைப் பொறுத்த வரையிலும், கிராமப்புற புத்திஜீவிகள், வியாபாரிகள் ஆகியோரைப் பொறுத்த வரையிலும் அவர்கள் இதில் இயல்பாகவே பயிற்றப்பட்டவர்கள். போர்க்கால சூழல் அவர்களின் இவ் வழமையை மேலும் நெறிப்படுத்தியுள்ளது. இவ் வழமைக்கு ஒரு தேசிய அந்தஸ்த்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அவ்வளவே தான். இங்கும் சாதி, சமய. அந்தஸ்து வேறு பாடின்றி அனைவரும் உற்பத்தியில் ஈடுபடுதல் ஒரு சாதாரணமானதாகவே உள்ளது.

உற்பத்தி நடவடிக்கைகளில் வடதமிழீழத்தவர்கள் சுறுசுறுப்பானவர்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம். இது எதிரிகளால் கூட வியந்து பாராட்டப்படும் ஒரு விடயமாகும். அதேபோல் வட தமிழீழத்தவர்களின் பிராந்திய அடிப்படை பழக்க வழக்கங்களும் உலகமறிந்ததொன்று. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணம் இதில்முன்னணி வகிக்கின்றது சில உதாரணங்களைத் தருவோம்.

''எந்த தில்லிக்குச் சென்றாலும் ஒரு யாழ்ப்பாண சோற்றுக் கடை இருக்கும். குத்தரிசி சோற்றுப் பழக்கம் இலகுவில் விட்டுப் போகாது. முருங்கக்காயும், நல்

லெண்ணையும் விமானத்தில் கூட பயணம் செய்யும். அழுகல் மாம்பழமாக இருந்தாலும் யாழ்பாண மாம்பழம் சாப்பிட்டால் தான் பொச்சை தீரும். பனை கொடியேறினால் யாழ்ப்பாணம் வந்து இரண்டு போத்தல் அடித்தால்தான் மிகப் பெரும் ஆயாசம். லண்டனில் இருந்தாலும் நல்லூர் கந்தனுக்கும் சன்னதியானுக்கும் விரதம் இருந்தால்தான் மன அமைதி கிடைக்கும். இப்படி எத்தனையோ பிராந்திய அடிப்படை பழக்க வழக்கங்கள்.

ஆனால், இவ்வளவு இருந்தும் தமது பாரம்பரியமான பனையை மட்டும் அவர்கள் முழுமையாகப்பயன்படுத்துகிறார்களில்லையே? ஒவ்வொரு வரும் வீட்டுக்கு இரண்டு அல்லது மூன்று பனையின் பலன்களைப் பெறுவார்களானால் பலதேவைகள் பூர்த்தியாகுமே? இதை ஏன் செய்கிறார்கள் இல்லை? வீட்டுத் தோட்டம், வீட்டுக் கோழி, வீட்டுக் கால்நடை என்பது போல் வீட்டுப் பனைகள் என்ற பழக்க வழக்கம் இன்னமும் தோன்ற வில்லையே அது ஏன்?

சிறிலங்காவின் மத்திய பிரதேசத்தில் வாழும் சிங்களவர் தமிழர் ஆகியோர் கித்துள் மரத்தை வீட்டுத் தோட்டமாக பயன்படுத்தும் முறை சீனி இறக்குமதியாகும் இந்நிலையிலும் கூட செயற்படுவதை நோக்குதல் நல்லது. நில புல வசதியுள்ளவர்கள் ஏறத்தாள அனைவரின் வீட்டிலும் ஆகக் குறைந்தது இரண்டு கித்துள் மரமாவது இருக்கும். தாமே தமது மரத்தில் கித்துள் பாணி வடித்துக் கொள்வார்கள். முடியாதவர்கள் சம்பளத்துக்கு ஆட்கள் வைத்துக் கொள்வார்கள். கித்துள் கருப்பட்டியை வீடுகளில் காய்ச்சிக் கொள்வார்கள். கித்துள் கருப்பட்டி ஒரு தேசிய அந்தஸ்துள்ள பொருளாகவே இன்றும் கருதப் படுகிறது.

கோழி வளர்ப்பு தனியொரு சாதிக்கென்று ஒதுக்கப்பட்ட ஒரு தொழிலல்ல. விவசாயமும் அப்படியே. எந்தச் சாதியும் விவசாயம் செய்யலாம். கால்நடை வளர்ப்பும் சாதிக்கென்று வரையறுக்கப்பட்ட தொன்றல்ல. எந்தச் சாதியும் கால்நடை வளர்க்கலாம். ஆனால்...அந்தோ பரிதாபம் பனையுடன் தொடர்புபட்ட பிரதான தொழில்கள் அனைத்துமே குறிப்பிட்ட சாதிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமல்ல அத் தொழிலும் அச் சாதியும் குறைந்த சமூக அந்தஸ்து உள்ளதாகக் கருதவும் படுகிறது. இதுதான் இங்குள்ள பிரச்சனையாகும். இதுதான் பனை, தென்னை போன்ற பயிர்களுடன் தொடர்புபட்ட தொழில்கள் பரந்தளவில் பல்கிப் பெருகாமைக்கான அகநிலைக் காரணியாகும்.

இச் சாதிக் காரணி எவ்விதம் தோற்றம் பெற்றது. இன்று எவ்விதம் செயல்படுகிறது. சாதியின் கோரப்பிடியில் இருந்து பனை என்ற இந்தக் கற்பகத்தருவை விடுவிக்க அவசியமான சமூக பொருளாதார நிலமைகள் என்ன என்பவற்றை இனி வரும் பகுதிகளில் தொடர்வோம். □ □


தொடரும்.........

| | | | |
|---|---|---|---|
| யாழ் மாவட்டம் — | 60,00,000 | மன்னார் மாவட்டம் — | 30,00,000 |
| முல்லைத்தீவு மாவட்டம் | 5,00,000 | கிளிநொச்சி மாவட்டம் | 10,00,000 |
| வவுனியா மாவட்டம் | 5,000 | திருமலை மாவட்டம் | 50,0000 |
| மட்டக்களப்பு மாவட்டம் | 5,000 | | |

தமிழீழ மாவட்டங்களில் அண்ணளவாக ஒரு கோடி முதிர்ச்சி அடைந்த பனைகளில் 10,000 தொழிலாளர்களால் 2 இலட்சம் பனைகளே பயன்படுத்தப்படுகின்றன.

12 போத்தல் பதனீரில் 1 கி.கி பனைவெல்லம் தயாரிக்கலாம். அல்லது 22 போத்தல் பதனீரில் 1 கி.கி பனம்சீனி உற்பத்தி செய்யலாம்.

# “வித்தாய் வீழ்ந்து எம்மண்ணில் வெடித்துத் துளிர்க்கும் மாவீரர் நினைவிலே......



அறிவழகன்
(வடிவேல் ராஜா)



லெப்டினன்ட்
சந்திரன்
(சங்கரப்பிள்ளை அன்பரசன்)

☐ அறிவழகன்

திடீரென வந்து போன ஒரு கனவு போலத்தான் எம்மிடையே அறிவழகனின் அறிமுகமும், இழப்பும் அமைந்து விட்டது. குறுகிய காலமே அவனது செயற்பாடுகளை காணக் கூடியதாயிருப்பினும் சில மறக்க முடியாத நினைவுகளை அவன் எம்மனதில் தடம்பதித்து விட்டு சென்று விட்டான்.

இளைஞர்களுக்கே உரித்தான துடிப்பும் சுறுசுறுப்பும் அவனில் நிறைந்திருந்தது. புதியவற்றை அறிய வேண்டும் என்ற ஆர்வம் அவனில் நிறைந்திருந்தது. இதனால் அப்பாவித்தனமான அவனது கேள்விகள் சில வேளைகளில் எம்மைச் சிரிக்க வைத்தாலும் அவனது ஆர்வம் நிறைந்த செயற்பாடுகள் அவன் ஆழமானவன் என எமக்கு உணர்த்தியது. குழந்தைத் தனமான முகத்துடன்

எப்போதும் இனிய புன்னகையுடன் அவன் பழகுவது அவனுக்குப்பலநண்பர்களை பெற்றுக் கொடுத்தது. அவன் சிடுசிடுப்புடன் பழகுவதை காணமுடியாது.

எல்லோருக்கும் வளமான வாழ்வு அமைய வேண்டுமென கனவு கண்ட இப் போராளியின் வாழ்வுவறுமையின் ஆழமான வடுக்களைக் கொண்டது.

ஸ்ரீலங்காவின் குருநாகல் மாவட்டத்தில் 1972ல் பிறந்த இவனது குடும்பம் அடிக்கடி நிகழ்ந்த இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டது. சிங்களப் பகுதிகளில் முழந்தாளில் நின்று வாழ்வதைவிட பாரம்பரிய பிரதேசங்களிற்கு இடம்பெயர்வதே மேல் என எண்ணி அவனது குடும்பம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்தது.

''கொடிதினும் கொடியது இளமையில் வறுமை'' இவனது இளம்பராயமும் வறுமைச் சூழலில் கழிந்தது. இப்பிரச்சனைகளையும் தாண்டி அவன் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றான்.

பொதுவாகவே இப்பகுதியில் ஒரு மாணவன் கல்வி கற்கிறான் என்றால் அது அவனது மனவைராக்கியத்தை பொறுத்த ஒரு விடயமாகும். குடும்பத்தின் வறுமையினால் மாடு மேய்க்க வேண்டும். அல்லது கிளிக் காவலுக்கு செல்ல வேண்டும். அல்லது வயலில் ஏதாவது உழைத்தால்தான் அவனதும், குடும்பத்தினதும் பசியைப் போக்க முடியும் என்ற நிலையிலேயே அவனது இளமைக் காலம் அமைந்தது. இப்பின்னணியில் கல்வியைத் தொடர்வதும், உயர்கல்விக்குபோவதும் பெரிய சாதனைதான்.

அவன் வாழ்க்கையில்பட்ட அனுபவங்களும், வெளியுலகில் நடைபெற்று வந்த மாற்றங்களும் தமிழ் மக்களின் போராட்டத்தில் அவனை முழுமையாக இணைத்தது ஆயுதப் பயிற்சி பெற்று, சயனற்றை பெருமையுடன் கழுத்தில் அணிந்துகொண்டான், இதனைத் தொடர்ந்து அரசியல் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட இவன் அரசியல் வகுப்புகளில் குறுகிய காலத்தில் பல விடயங்களைத் தெரிந்து கொண்டான். இதன் பின்னர் தமிழீழ ஆய்வு நிறுவன மணலாறு மாவட்ட பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு, தனது கடமைகளை அப்பிரதேசத்தில் தொடங்கினான்.

மக்களை போராளிகளாகக் கொண்ட அந்த மண்ணில் கடமையாற்றுவது உண்மையிலேயே பெருமிதத்துக்குரிய ஒரு விடயந்தான். பொருளாதாரத் திட்டங்களை இனங்காணவும், செயற்படுத்தவும் ஆர்வம் கொண்டான். போர்மேகங்கள் கருக் கட்டியிருந்த அப்பிரதேசத்தில் எதிரியின் நாசகார வேலைகளில் இருந்து தன்னை பாதுகாத்துக் கொண்டு நெருக்கடிகால பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் ஈடுபடுவது என்பது மிகவும் கடினம். அக்கால கட்டத்தில், கடமையில் ஈடுபட்ட அறிவழகன் தனது கடமையின் நிமித்தம் யாழ் மாவட்டம் வந்து திரும்பியவேளை, கிளிநொச்சியில் எதிர்பாராத விபத்தொன்றில் எம்மை விட்டுப் பிரிந்தான்.

இவனது மறைவின் பின் அவனது வீட்டிற்கு நேரில் நாம் சென்றபோது அவனது தாயே முதலில் எமது கண்ணில் பட்டார். ஒட்டி மெலிந்துபோன அந்த தாயின் கண்கள் ஏக்கத்துடன் எமக்குள் அறிவழகனை தேடின. அந்த வீட்டுக் கூரைகளினூடாக எல்லா நட்சத்திரங்களும் வானில் தெரிந்தன. கந்தல் உடைகளுடன் தம்பி, தங்கைகள் ஓடித்திரிந்தனர். அந்த வயதில் தாய் தான் இவர்களுக்கும் சேர்த்து இனி உழைக்க வேண்டும் என்ற நிலை எம்மை துன்புறுத்தியது.

இது போன்ற எத்தனையோ தாய்கள் தமது உயிருக்கு மேலாக நேசித்த தம் புதல்வர்களை இந்த மண்ணிற்கு கொடுத்து விட்டு இம்மண்ணில் சகிக்க முடியாத வறுமையில் உழல்கின்றனர்.

## லெப்டினன்ட் சந்திரன்

சிரித்த முகம் அமைதியான சுபாவம், எவருடனும் பழகுவதற்கு இனிமையான ஒரு போராளி. அவன் தான் லெப். சந்திரன்

இவன் 1987இன் முற்பகுதியில் இயக்கத்துடன் முழுமையாக சேர்ந்து கொண்டான். ஆனாலும் 1986 நடுப்பகுதியிலேயே கிராமிய மட்டத்தில் பகுதிநேரமாக பணி புரிந்தான். இவன் காரியாலயப்பணிகளைக் கவனித்துக் கொண்டிருந்த போதே யுத்த முனைக்குச் சென்றான். மேஜர் காசியுடன் கட்டுவனை நோக்கி விரைந்து, கட்டுவனில் ஒரு காவல் அரணுக்கு பொறுப்பேற்று கடும் சமர்புரிந்தான். சிறிலங்கா இராணுவத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தினான். பறிக்கப்படும் மண்ணையும், மக்கள் உயிரையும் எண்ணி எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயாரான இவன் இதன் விளைவாய் கரும் புலிப் படைப் பிரிவிலும் இணைந்து கொண்டான்.

இக்காலப் பகுதியிலே இந்திய ,இலங்கை ஒப்பந்தமும் இந்திய இராணுவ வருகையும் ஏற்பட்டது சந்திரன் மீண்டும் தனது பழைய இடத்தை அடைந்தான். இந்திய இலங்கை அரசுகளின் சூழ்ச்சியும் தமிழ் மக்களிற்குச் செய்யப்படும் அநியாயத்தையும் உன்னிப்பாக அவதானித்து வந்த போராளிகளுடன் இவனும் ஒருவனாக செயற்பட்டு வந்தான். இந்த சூழ்ச்சிகளை ஈழத்தமிழ் மக்களுக்கு புரியவைக்க வேண்டும் என அவாக் கொண்டான். இந்தக் காலப் பகுதியிலேயே திலீபன் நீராகாரம் அற்ற சாகும் வரை உண்ணா விரதத்தை மேற்கொண்டான். அந்தத் தியாக வேள்வியில் மக்களைக்கலந்து கொள்ள வைத்து உண்மை சொரூபத்தை விளக்கவும், ஆட்சியாளர்களது முகத்திரையைக் கிழிக்கவும் முற்பட்டான். இதற்காகத் தமது பகுதியிலுள்ள மக்களை உண்ணா நோன்பில் கலந்து கொள்ளவும், அப்பகுதியில் எழுச்சிக் கூட்டங்கள் நடாத்தவும் ஒழுங்குகளை மேற்கொண்டான்.

இந்திய இராணுவத்துடனான யுத்தம் ஆரம்பமானது. சந்திரன் கல்லுண்டாய் வெளியில் இந்திய இராணுவத்தை எதிர் கொண்டு தாக்குதல் நடாத்தினான். இக் காலப் பகுதியிலே இவன் பல தாக்குதல்களில் பங்கு கொண்டான். அதில் முக்கியமாக சங்கானையில் இந்திய இராணுவத்தின் டாங்கி தகர்க்கப்பட்டதைக் குறிப்பிடலாம்.

30 கலிபர் துப்பாக்கி இயக்குவதில் வல்லவனாக சந்திரன் விளங்கினான். வட்டுக் கோட்டையில் 30கலிபர் குழுவில் ஒருவனாக சிறப்பாகப் போராடி காயமுற்று சிகிச்சை பெற்று வந்த வேளையில் எதிர் பாராதவிதமாக இந்திய இராணுவத்திடம் பிடிபட்ட சந்திரன் அவர்களதுசித்திரவதைக்கும் சிறைவாசத்திற்கும் உட்பட்டான்.

இந்திய இராணுவம் ஈழதேசத்தில் இருந்து வெளியேறும் போது விடுவிக்கப்பட்ட சந்திரன் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றினான். இக் காலப் பகுதியில் மக்களின் அன்புக்குரியவனாக செயற்பட்டான். தமிழீழ மக்களின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதில் தனது பங்கையாற்றினான். தமிழீழ மக்களின் பொருளாதாரத்தில் ஆனையிறவின் முக்கியத்துவத்தை சந்திரன் முழுமையாக உணர்ந்தான். ஆனையிறவு தளத்தின் மீது விடுதலைப் புலிகள் பெரும் யுத்தம் ஒன்றை நடத்த முனைந்த போது அதில் தானும் பங்குகொள்ள வேண்டுமெனப்பெரும் அவாக் கொண்டான். தன்னிடம் இருந்த பொறுப்புக்களை சக தோழர்களிடம் கொடுத்து விட்டு களம்நோக்கி விரைந்தான் சந்திரன்.

ஆனையிறவு யுத்தம் முனைப்புப் பெற்றுக் கொண்டிருந்த போது கட்டைக் காட்டில் தரையிறங்கிய இராணுவத்தை எதிர் கொண்ட குழுவில் இணைந்து நேரடியுத்தத்தில் ஈடுபட்டான். மும்முனைத் தாக்குதல்களுக்கு மத்தியில் கடும் சமர் புரிந்தான். தொடர்ந்தும் நடந்த சமரில் சந்திரன் வீரமரணமடைந்தான். அவனது இரத்தம் தமிழீழ மண்ணை சிவக்க வைத்தது.

ஆதாரம்

புரட்டாதி - ஐப்பசி 1991

இதழ் - 5

''ஆயுதம் செய்வோம்
நல்லகாகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம்
கல்விச்சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம்
தலை சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம்
பலவண்மைகள் செய்வோம்''

— பாரதியார்

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

தமிழீழப் பிரதேசத்தில் உள்ள பாரிய வளங்களும், அவைகளை மையப்படுத்திய கைத்தொழில் சாலைகளும், இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளாக சிறிலங்கா அரசால் மாற்றப்பட்டு வந்துள்ளன. இப் பிரதேசங்களை பெரும் உயிர், பொருள் இழப்புக்களுக்கு மத்தியிலும் தன் வசப்படுத்தி வைத்திருக்கவே சிறிலங்கா அரசு முயற்சித்து வருகின்றது.

இவ்வாறு வளம் நிறைந்த பிரதேசங்களை சிறிலங்கா அரசு தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனைவதன் மூலம் தமிழ்ப் பிரதேசத்தில் பெரும் தொழில் வாய்ப்பையும், வருமானத்தையும் தடுத்து வேலையில்லாத் தன்மையை ஏற்படுத்தி வருகின்றது.

இவ்வளங்களை சிறிலங்கா அரசு சுரண்டவே முயலுகின்றது. ஆனால் அது முடியாத சூழ்நிலையில் தமிழ் மக்கள் இந்த வளங்களைப் பயன் படுத்த முடியாதவாறு பார்த்துக் கொள்வதில் பெரும் கவனத்தைச் செலுத்தி வருகின்றது.

அத்துடன் தமிழீழ மக்களின் சந்தைப் பொருளாதாரம் முன்பு கொழும்புச் சந்தையை நோக்கியதாகவே காணப்பட்டது. ஆனால் ஒன்றரை வருட காலமாக தொடர்ந்து வரும் பொருளாதாரத் தடையினால் எமது சந்தைப் பொருளாதாரம் எமது பகுதியை மையப்படுத்தியதாக மாற்றம் பெற்று வளர்ச்சியடைந்து வருகின்றது.

இவ் வளர்ச்சி எமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அளவுக்கும், நேரடியாக, மாற்றீடாக உபயோகிக்கக் கூடிய பொருட்களைக் கண்டு கொள்வதிலும் உபயோகிப்பதிலும் வெற்றி கண்டுள்ளது.




உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு உள்ளூரிலே விற்பனை செய்யப்படும் சந்தைப் பொருளாதாரம், சுய சார்புப் பொருளாதாரத்திற்கு வித்திட்டு செல்லும். எனவே சிறிலங்கா அரசின் இப் பொருளாதாரத்தடை, எமது மண்ணில் நாம் தன்னிறைவை நோக்கி காலடி எடுத்து வைக்க வழிகோலுகின்றது.

பொருளாதாரத் தடை மூலம் தமிழீழப் பகுதிக்குள் சிறிலங்காவில் இருந்து வந்த உற்பத்திக்கான உள்ளீட்டு மூலப் பொருட்களை வர விடாது தடுக்கப்பட்டது.

இதன் மூலம் எமது உற்பத்தியாளர்களையும், உற்பத்தி முறையை யும், உற்பத்திகளையும் சிதைத்தது. எரிபொருள், உரம், நல்லின வித் துகள், போக்குவரத்துக்கள் என்று சிறிலங்காவை எதிர் பார்த்திருந்த தமிழீழ மக்கள் இத் தடையின் மூலம் உழைப்பற்றவர்களாக, உணவற் றவர்களாக மாற்றிவிட முடியும் எனவும் சிறிலங்கா அரசு நினைத்தது.

உரிமை மறுக்கப்பட்ட அடிமைகளாக தமிழீழ மக்களை மண்டியிட வைத்துவிட முடியுமென சிறிலங்கா அரசு திட்டம் தீட்டியது. அதன் மூலம் எமது பொருளாதாரத்தை சுரண்டவும் எமது மண்ணை அபகரிக் கவும் முடியும் எனவும் எண்ணியது.

ஆனால் எமது மக்களின் சுதந்திர வேட்கையால் எமது உற்பத்திகளை உபயோகிக்கவும், மாற்றீடாகப் பழகிக் கொண்டமையும் அரசின் உதவியின்றி உற்பத்திகளை மேற்கொண்ட உற்பத்தியாளர்களின் முயற்சிகளும், சிறிலங்கா அரசு பொருளாதாரத்தடை மூலம் அடைய இருந்த நோக்கங்களைத் தோல்வியடையச் செய்தன.

மாறாக எமது வளர்ச்சியைக் கண்டு சகிக்க முடியாத சிறிலங்கா அரசு தமிழீழப் பிரதேசத்துக்குள்ளேயே மக்களின் நகர்வைத் தடுக்க நினைக்கின்றது. பொருளாதாரத் தடையை ஏற்படுத்த முயற்சிக்கின்றது.

யாழ்குடா நாட்டின் முக்கிய மக்கள் நகர்வு பாதைகளான பண்ணைப்பாதை, பூநகரிப்பாதை, போன்ற பகுதிகளில் இராணுவக் குவிப்பு இதனை வெளிப்படுத்துகின்றது.

ஆனால் பொருளாதாரத்தடை மூலம் எமது உற்பத்திகளை உபயோகிக்கப் பழகிவிட்ட மக்களும், பல்கிப் பெருகி விட்ட உள்ளூர் உற்பத்திகளும் அரசின் இத்திட்டத்தையும் தோல்வியடையச் செய்யும் என்பது நிட்சயம்.

இருப்பினும் எமது பழக்கத்தையும், உள்ளூர் உற்பத்தியையும் நசுக்குவதற்காக, எமது வளர்ச்சியைத் தடுப்பதற்காக மீண்டும் சிறிலங்கா அரசு தமிழீழ மக்களின் பொருளாதாரச் சந்தையை கொழும்பை நோக்கியதாக மாற்றியமைக்க முயற்சிக்கும். இம் முயற்சி வெற்றி அளித்தால் நாம் மீண்டும் அந்நியனது பொருளாதாரத்தில் தங்கியிருக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டவர்களாக மாற வேண்டி ஏற்படும்.

எனவே நாம் தனித்து வாழும் முயற்சியில், உற்பத்தி முறையில், உற்பத்தி அளவில் திட்டம் தீட்டி உள்ளூர் உற்பத்தியில் நாட்டம் கொண்டவர்களாக மாற வேண்டும். உள்ளூர்கைத் தொழில் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.

இதன் மூலம் எமது பொருளாதாரத்தை எந்த சக்தியாலும் நசுக்கிவிட முடியாது. எமது மண்ணை நம்பிய மக்களாக வறுமைக்கு அப்பாற்பட்டவர்களாக மகிழ்ச்சியுடன் வாழ முடியும்.

நன்றி

தமிழீழ ஆய்வு நிறுவனம்

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை,
நியாய விலையில் கொள்வனவு செய்ய,
எம்மிடம்
வாருங்கள்.

சிறுதானிய வகைகள்,
பனை, தென்னை ஆகியவற்றில்,
இருந்து பெறப்படும்,
அனைத்து உணவுப் பொருட்கள்
எல்லாமே கிடைக்கும்!

மொத்த விற்பனை நிலையம்,
ஆடியபாதம் வீதி,
(கொக்குவில் பிரதேசசபை முன்பாக)
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

தமிழீழத்தில் இப்போது,

எந்த விழாவாக இருந்தாலும்!
இல்லங்களாக இருக்கட்டும்!

எங்கும்,
எப்போதும்

எல்லோரையும் திருப்திப்படுத்தும்,

"அர்ச்சயா"

மென்பானங்கள்.

தமிழீழத்தின் தனிப்பெரும் பானங்கள்

"அர்ச்சயா"

தவறாது பருகுங்கள்

"அர்ச்சயா"

☐ தமிழீழ ஆய்வு நிறுவன தயாரிப்பு